**செ. கு. எண்: 138** **நாள்: 18.09.2016**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 18.9.2016

சென்னை, தண்டையார்பேட்டை வட்டம், வ.உ.சி நகர், சுனாமி குடியிருப்பு பகுதியைச் சேர்ந்த திரு. சரவணன் மற்றும் திரு. ராஜி ஆகிய இருவரும் 7.11.2015 அன்று விசைப் படகில் கடலில் மீன் பிடிக்கும் பணியை மேற்கொண்டிருந்த போது, படகு உடைந்து நீரில் மூழ்கியதில் காணமல் போய் இது நாள் வரை வீடு திரும்பவில்லை என்ற செய்தியையும்;

சென்னை, தண்டையார்பேட்டை வட்டம், காசிமேடு, சிங்காரவேலர் நகரைச் சேர்ந்த திரு. மில்கியாஸ் மற்றும் அவரது மகன் திரு. சகாயராஜ் ஆகிய இருவரும் 14.4.2016 அன்று கடலில் மீன் பிடிக்கும் பணியை மேற்கொண்டு, ஆந்திராவை நோக்கி படகில் சென்று கொண்டிருந்த போது, 17.4.2016 அன்று திடீரென படகு உடைந்து, இருவரும் நீரில் மூழ்கியதில், திரு மில்கியாஸ் உயிரிழந்த நிலையில், அவரது உடல் மட்டும் மீட்கப்பட்டது என்றும், அவருடன் கடலுக்கு சென்ற அவருடைய மகன் திரு. சகாயராஜ் இன்னமும் திரும்பவில்லை என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் வருத்தம் அடைந்தேன்.

கடலில் மீன் பிடிக்கும் பணியில் ஈடுபட்டிருந்த போது உயிரிழந்த திரு. மில்கியாஸின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்வதுடன், அவரது குடும்பத்திற்கு ஒரு லட்சம் ரூபாயும்;

கடலில் மீன் பிடிக்கும் போது, காணமல் போன திரு. சகயாராஜ், திரு. சரவணன் மற்றும் திரு. ராஜி ஆகியோரின் குடும்பங்களின் வறிய சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு, அவர்களின் குடும்பங்களுக்கு தலா ஒரு லட்சம் ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**